# SNS academy

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

பாடம் 1.1 – எங்கள் தமிழ்
GRADE- VII

QUESTION BANK

## இயல் 1

### அ) குறு வினா

1. **தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

**விடை:**

**தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன:**

- நம் தாய்மொழி தமிழ், அருள் வழிகள் நிரம்பிய அறிவைத் தரும்.
- கொல்லாமையைக் குறிக்கோளாகவும், பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.
- நம் தமிழ்மொழி அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தை தூண்டும். அஃது அச்சத்தை போக்கி இன்பம் தரும்.

2. **தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

**விடை:**

- தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் (செல்வம்) பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
- தம்மை போற்றாதவரையும் இகழ்ந்து பேச மாட்டார்.

## ஆ) சிறு வினா

**1. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**விடை:**

**எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகள் பின்வருமாறு.**

- நம் தாய்மொழி தமிழ், அருள் வழிகள் நிரம்பிய அறிவைத் தரும். அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.
- தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் (செல்வம்) பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மை போற்றாதவரையும் இகழ்ந்து பேச மாட்டார்.
- கொல்லாமையைக் குறிக்கோளாகவும், பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.
- நம் தமிழ்மொழி அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.